16.06.2026

O.S.No.284/2017

PW1- சங்கரி – க/பெ செல்வராஜா

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.06.2026

குறுக்கு விசாரணை : ( 1ம் பிரதிவாதி தரப்பில்)

1ம் பிரதிவாதி அழைத்தும் ஆஜரில்லை. 1ம் பிரதிவாதி தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்யாததால் 1ம் பிரதிவாதி தோன்றா தரப்பினராக பாவிக்கப்பட்டார்.

**5,6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்.ஏ.,பி.எட் படித்துள்ளேன்.

2. எம்.ஏ.,பி.எட் பட்டயம் தொலைதூரக் கல்வியில் படித்தேன் என்றால் சரிதான்.

3. முதல் விசாரணை வாக்குமூலத்தை படித்து பார்த்து கையொப்பம் செய்யவில்லை என்றால் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியும்.

4. வழக்கு சொத்து பள்ளி யாரால் தொடங்கப்பட்டது என்றால் என் மாமனாரால் 1953ம் வருடம் தொடங்கப்பட்டது.

5. வழக்கு சொத்து பள்ளி தொடக்க பள்ளி என்றால் சரிதான். அது அரசு உதவி பெறும் பள்ளி என்றால் சரிதான்.

6. என் மாமனார் அய்யாச்சாமிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 7 பிள்ளைகள் ராஜலட்சுமி, சரஸ்வதி என்ற மீனா, ராதாபாய், செல்லத்துரை, செல்வராஜா, மல்லிகா, அம்பலவாணன்.

7. வழக்கின் வாதிகள் யார் என்றால் செல்வராஜா (இறப்பு) என் கணவர், என் மாமியார் சண்முகம்( இறப்பு), ராதாபாய் மற்றும் மல்லிகா.

8. 6,7 வாதிகள் எனது பிள்ளைகள் என்றால் சரிதான். 6,7 வாதிகள் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

9. என் மாமனார் அய்யாச்சாமி அவரது சொத்தை மூன்றாக பாகம் பிரித்து 1 பங்கை பள்ளியாக மாற்றம் செய்து 1ம் பிரதிவாதி செல்லத்துரை பெயரில் எழுதிவைத்தார் என்றால் சரியல்ல.

10. வழக்கு சொத்து பள்ளியானது 1ம் பிரதிவாதி பெயரில் இருந்ததால் தான் 5,6 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதி பெயருக்கு ஆவணம் மாற்றிக் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல.

11. நான் எந்த பள்ளியில் வேலை செய்கிறேன் என்றால் வழக்கு சொத்து பள்ளியில் தான் ஆசிரியராக வேலை செய்கிறேன்.

12. பொதுவாக அரசு உதவி பெறும் பள்ளியில் பிரச்சனை ஏற்பட்டால் யாரிடம் முதலில் தகவல் தெரிவிக்கவேண்டும் என்றால் தொடக்க கல்வி அலுவலரிடம் தெரிவிக்கவேண்டும்.

13. தொடக்க கல்வி நிர்வாக அலுவலர் பள்ளி நிர்வாகத்தை அழைத்து ஆவணங்களை பரிசீலனை செய்து ஆவணம் யார் வசம் இருக்கிறதோ அவருக்கு தான் பள்ளி நிர்வாகம் செய்ய அதிகாரம் வழங்குவார் என்றால் சரிதான்.

14. வழக்கு தாக்கல் செய்யும் போது வழக்கு சொத்திற்கான தொடக்க கல்வி அலுவலர் சேரன்மகாதேவியில் இருந்தார் என்றால் சரிதான். சேரன்மகாதேவி கல்வி அலுவலரை இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

15. அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் என் வழக்கானது பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

16. என் மாமனார் அய்யாச்சாமி 1ம் பிரதிவாதி செல்லத்துரையை எத்தனை வருடம் நிர்வாகம் செய்ய அனுமதி வழங்கினார் என்றால் 1 வருடம் மட்டுமே வழங்கினார். அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

17. தற்போது வரை செல்லத்துரை பள்ளியை நிர்வாகம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல வட்டார கல்வி அலுவலர் நிர்வாகம் செய்து வருகிறார்.

18. என் குடும்பத்தில் உள்ள தனிப்பட்ட பிரச்சனை காரணமாக 5,6 பிரதிவாதிகளை தேவையில்லாமல் கட்சி சேர்த்துள்ளதால் என் வழக்கு 5,6 பிரதிவாதிகள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

ஒம்/—J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி